(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 345.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2014 மார்ச்சு 05, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3132/ '12

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3398/ '12

2.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தறை மாநகர சபை தனது ஆளுகைப் பிரதேசத்தை அழகுபடுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் நகரத்தின் பிரதானமான அரச பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்கள் அமைந்துள்ள பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் அமைந்துள்ள உள் வீதிகள் 20 வருடங்களாக புனரமைக்கப்படாமையால் மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளன என்பதையும்;

(ii) உள் வீதிகளின் இருமருங்கிலும் ஆங்காங்கே குப்பை கூளங்கள் போடப்பட்டுள்ளமை பொதுமக்களின் சுகாதாரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாத்தறை மாநகர சபை எல்லைக்குள் பழுதடைந்துள்ள பாதைகளை துரிதமாக புனரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) குப்பை கூளங்களை அகற்றுவதற்கு ஒழுங்கான முறையியலொன்று பின்பற்றப்படுமா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3607/ '13

3.

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் மற்றும் 2013 சனவரி காலப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் மத்திய நுவரகம் பலாத்த பிரதேச செயலாளர் பிரிவில்

(i) பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்ததால் இழப்பீடு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இழப்பீடு வழங்கப்படாத முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெள்ளப்பெருக்கு காரணமாக இப் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்த பயிர்ச்செய்கைகள் யாவை என்பதையும்;

(ii) இப் பயிர்ச்செய்கை காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முழுமையாக சேதமடைந்த ஏனைய பயிர்ச்செய்கைக் காணி ஏக்கர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஒரு ஏக்கர்வயல் காணிக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஏனைய மேலதிக பயிர்ச் செய்கைகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) அவ்வாறாயின் வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(viii) மேலே குறிப்பிட்டவாறு இழப்பீடு வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3687/ '13

4.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் கரப்பந்தாட்டத்தின் மேம்பாட்டுக்காக, இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்திற்கு 2012/2013 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ள பணத் தொகைகள் தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாடு செல்கின்ற இலங்கை ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்திலிருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பிரதானமாக வருமானம் பெறுகின்றது என்பதையும்;

(ii) கஷ்டங்கள், துன்புறுத்தல்களுக்கு ஆளான இலங்கை ஊழியர்கள் பெருந்தொகையானோர் மத்திய கிழக்கு நாடுகளில் தடுப்பு முகாம்களில் கஷ்டப்பட்டுவருகின்றபோது, அவர்களை விடுவித்து துரிதமாக இலங்கைக்கு அழைத்துவருவதற்கு முன்னுரிமை வழங்காது, அப்பணத்தை கரப்பந்தாட்டம் போன்ற வேறு நோக்கங்களுக்கு செலவிடுவது அநீதியாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

4094/ '13

5.

கௌரவ அனுர திசாநாயக்க,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் வ/ப ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தினால் யாதேனுமொரு வகை விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டு அல்லது குத்தகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி விமானக் கொள்வனவு அல்லது குத்தகைக்கு பெறுதல் தொடர்பில் பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) கொள்வனவுகள் அல்லது குத்தகை அடிப்படையிலான பெறுகைகள் கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதற்காக விண்ணப்பித்திருந்த நிறுவனங்கள் மற்றும் விலைகள் யாவையென்பதையும்;

(iv) விண்ணப்பித்திருந்த நிறுவனங்களில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட விமானக் கொள்வனவு அல்லது குத்தகை அடிப்படையிலான பெறுகைகள் சார்பில் செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அப் பணத் தொகை எவ்வாறு பெறப்பட்டதென்பதையும்;

(iii) மேற்படி பணத் தொகை கடனாகப் பெறப்பட்டிருப்பின், கடன் தொகையின் அளவுகள், வட்டி வீதங்கள் மற்றும் கடனை திருப்பிச் செலுத்த வேண்டிய காலம் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4102/ '13

6.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) "கப்பல்களிலிருந்து வெளியேற்றப்படுகின்ற எண்ணெய்யை" களஞ்சியப்படுத்துவதற்கும் ஏற்றிச் செல்வதற்கும் அனுமதியளிக்கும் வகையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள வருடாந்த உரிமப்பத்திரமொன்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட "எரி எண்ணெய்யை" களஞ்சியப்படுத்தும் மோசடிச் செயலை முல்லேரியா மற்றும் தெக்கட்டன மோரகல பிரதேசத்தில் பொலிசார் கண்டுபிடித்துள்ளார்கள் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி சுற்றிவளைப்புகளுக்கு அமைய,

(i) மேற்படி எரி எண்ணெய் ஏற்றிச் செல்லப்பட்ட இடம் யாதென்பதையும்;

(ii) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதா என்பதையும்;

(iii) அதன் போது கைது செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் யாவையென்பதையும்;

(iv) ஏற்றிச்செல்லப்பட்ட எண்ணெய்யின் அளவு எவ்வளவென்பதையும்;

(v) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த எரிஎண்ணெயின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4128/ '13

7.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,—தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2013 மாச்சு மாதம் 26 ஆம் திகதி வெலிமட அம்பகஸ்தோவ ஸ்ரீ சுமனஜோதி வித்தியாலயத்தின் மாணவர்கள் கொழும்பு நூதனசாலையைப் பார்வையிட வருகைதந்தார்கள் என்பதையும்;

(ii) நூதனசாலையின் படிக்கட்டுகள் இடிந்துவீழ்ந்ததன் காரணமாக அவர்கள் விபத்தொன்றை எதிர்நோக்கினார்கள் என்பதையும்;

(iii) மேற்படி விபத்து காரணமாக பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் காயமடைந்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விபத்தினால் காயமடைந்த மாணவர்கள், ஆசிரியர்கள், முதியவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) விபத்திற்கு உள்ளான மேற்படி சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தற்போதைய நிலைமை யாது என்பதையும்;

(iii) விபத்திற்கு உள்ளான மேற்படி சிறுவர்கள் தொடர்பாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் யாது என்பதையும்;

(iv) விபத்திற்கு உள்ளான மேற்படி சிறுவர்களின் கல்வி நடவடிக்கைளுக்கு ஏற்பட்டுள்ள தடைகள் தொடர்பாக முறையாக ஆராய்ந்து அத்தடைகளுக்கு பரிகாரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) கமத்தொழிலை வாழ்வாதாரமாக கொண்டுள்ள மேற்படி விபத்திற்கு உள்ளானவர்கள் உரித்தான குடும்பங்களுக்கு குறித்த விபத்து காரணமாக ஏற்பட்டுள்ள அசௌகரியங்களை தவிர்ப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ள விதம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3133/ '12

8\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து அம்பாறை மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப் பட்டிருக்கின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் அம்பாறை மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3419/ '13

9\.

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கடந்த 10 வருட காலத்தினுள் பதிவு செய்யப்பட்டுள்ள முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கு அரசு வழங்கியுள்ள நிவாரணங்கள் யாவை;

(iii) முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டர் சைக்கிள்கள் சார்ந்த கைத்தொழில்களில் ஈடுபடுகின்றவர்களை ஊக்குவிப்பதற்காக அந்த வாகனங்களின் உதிரிப்பாகங் களுக்கு வரிச் சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஏற்கனவே அவ்வாறான சலுகைகள் வழங்கப்பட்டிருப்பின் அவற்றின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3608/ '13

10\.

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 திசெம்பர் மற்றும் 2013 சனவரி காலப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக அநுராதபுர மாவட்டத்தில் ஹொரோபத்தான பிரதேச செயலாளர் பிரிவில்

(i) பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்ததால் இழப்பீடு வழங்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) இழப்பீடு வழங்கப்படாத முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெள்ளப்பெருக்கு காரணமாக இப் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்த பயிர்ச்செய்கைகள் யாவை என்பதையும்;

(ii) இப் பயிர்ச்செய்கை காணிகளின் பரப்பளவு யாது என்பதையும்;

(iii) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) முழுமையாக சேதமடைந்த ஏனைய பயிர்ச்செய்கைக் காணி ஏக்கர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) முழுமையாக சேதமடைந்த மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஒரு ஏக்கர்வயல் காணிக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(vi) முழுமையாக மற்றும் ஒரு பகுதி சேதமடைந்த ஏனைய மேலதிக பயிர்ச் செய்கைகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(vii) அவ்வாறாயின் வழங்கப்பட்டுள்ள இழப்பீட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(viii) மேலே குறிப்பிட்டவாறு இழப்பீடு வழங்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4103/ '13

11\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் இற்றைவரை பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட S - 11 (S11) வகை புகையிரத வலுப்பொறித் தொகுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத வலுப்பொறித் தொகுதிகளில் இன்றளவில் பாவனையில் உள்ளவற்றின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி புகையிரத வலுப்பொறித் தொகுதிகளுக்காக வழங்கப்பட்டுள்ள உத்தரவாதக் காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) மேற்படி புகையிரத வலுப்பொறித் தொகுதிகளை இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்கூறப்பட்ட புகையிரத வலுப்பொறித் தொகுதிகளில் தற்போது பல்வேறு குறைபாடுகளின் காரணமாக பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4129/ '13

12.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 'தயட்ட கிருள' நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்திரமாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் மதிப்பிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பிலுமான ஒப்பந்தத்தை அமுல்படுத்திய நிறுவனம் யாது என்பதையும்;

(v) ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் தற்போதைய நிலைமை யாது என்பதையும்

தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4149/ '13

13.

கௌரவ அனுர திசாநாயக்க,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கதிர்காமம் - தம்மன்னாவ இரத்தினக்கல் ஏல விற்பனைக் காணியில் CCTV நிழற்படக் கருவி முறைமையொன்று பொருத்தப்பட்டதா;

(ii) CCTV நிழற்படக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்த கால எல்லை யாது;

(iii) மேற்படி CCTV நிழற்படக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டனவா;

(iv) இன்றேல், மேற்படி நிழற்படக் கருவிகள் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டதா;

(v) குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின், மேற்படி CCTV நிழற்படக் கருவிகளை வழங்கிய நிறுவனம் யாது;

(vi) மேற்படி நிழற்படக் கருவி முறைமையை கொள்வனவு செய்வதற்கு அல்லது குத்தகைக்குப் பெறும் பொருட்டு கடைப்பிடித்த நடைமுறை யாது;

(vii) CCTV நிழற்படக் கருவி முறைமையொன்று பொருத்தப்பட்டிருக்கையில் 2012.04.03 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மிய தினமொன்றில் தம்மன்னாவ காணியிலிருந்து படிம மண் இரகசியமாக ஏற்றிச்செல்லப்பட்டுள்ளதா;

(viii) அவ்வாறெனின், அந்த படிம மண் ஏற்றிச் செல்லப்பட்டமை CCTV நிழற்படக் கருவி முறைமையில் பதிவாகியுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3134/ '12

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 சனவரி மாதத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள சில காணிகள் அரசியல்வாதிகளாலும் அரசியல் ரீதியாகத் தொடர்புடைய அலுவலர்களாலும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பது பற்றி அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010ஆம் ஆண்டிலிருந்து திருகோணமலை மாவட்டத்தில் உடைமை மாற்றப்பட்டிருக்கின்ற, குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற மற்றும் அனுமதிப் பத்திரம் அல்லது 'சுவர்ணபூமி' உறுதிகளின் பிரகாரம் பராதீனப்படுத்தப் பட்டிருக்கின்ற அரசாங்கக் காணிகளின் பெயர்கள், ஏக்கர் அளவுகள், பெறுமதிகள் ஆகியவற்றை காணி வாரியாகவும்;

(ii) மேற்சொன்ன காணிகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது ஒப்படைத்தல் மற்றும் அதில் கேள்விப்பத்திர நடைமுறைகளைப் பின்பற்றாமை ஆகியவற்றுக்கான காரணங்களையும்;

(iii) (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் ஏனைய பகுதிகளிலும் தசாப்த காலங்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மேற்படி காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புகள் அல்லது வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா

என்பதையும் அவர் கூறுவாரா?

(இ) (i) பயங்கரவாதிகளின் உடைமையாக இருந்த பகுதிகளைச் சுத்திகரித்தல் எனும் பெயரின் கீழ் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கடற்கரைக் காணிகளைச் சட்டரீதியான உரிமையாளர்களிடமிருந்து பலவந்தமாக அல்லது வலுக்கட்டாயத்துடன் சுவீகரித்தல் தொடர்பான சார்த்துரை உண்மையானதா என்பதையும்;

(ii) இன்றேல், அத்தகைய சார்த்துரை எவ்வாறு எழுகின்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3524/ '13

15.

கௌரவ புத்திக பதிரண,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொக்கல விமானப்படை முகாமருகில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு சொந்தமான வீடமைப்புத் தொகுதியொன்று அமைந்துள்ளது என்பதை அறிவாரா;

(ii) மேற்படி வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) அவ்வீடமைப்புக் கருத்திட்டத்திற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை யாது;

(iv) அதற்கான நிதியங்கள் பெறப்பட்ட மூலங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இன்றளவில் மேற்படி வீட்மைப்புத் தொகுதியில் குடியமர்வதற்காக வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி கருத்திட்டம் இற்றைவரை பொதுமக்களின் பாவனைக்காக ஒப்படைக்கப்பட்டிராவிடின் அது தேசிய செல்வத்தை நாசமாக்குவதாகும் என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) ஆமெனில், சுற்றுலாக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்காக அல்லது வேறேதேனும் பயனுறுதிமிக்க நடவடிக்கைக்காக அவ்வீடமைப்புக் கருத்திட்டத்தை ஈடுபடுத்த திட்டமிடுவாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 6.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

2.

கௌரவ ரொசான் ரணசிங்க,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"இலங்கை தொழில்சார் வங்கியாளர் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24 அ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1833/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 6.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

12.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

13.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

14.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.
அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.
பாராளுமன்றத்தின் இளைப்பாறிய பணியாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.
பி. ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.
மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.
மகமெவுனாவ சதஹம் சேவாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.
ஸிவ்முனி ஸே வெஹெர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.
வசந்த சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.
இலங்கை உளவியல் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.